


34 ஆவது ஆண்டில்
Tel: 416-282-8059
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
email: vlambaram@sympatico.ca www.vlambaram.com




நதி: 34 பாலம்: 06 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MARCH 15, 2024

# அகதிகளை திருப்பி அனுப்ப மாட்டோம்!

1986 ஒகஸ்ற் 11ஆம் திகதி கனடாவின் நியூபவுண்லாண்ட் (Newfoundland) கரையில் படகில் வந்திறங்கிய 155 இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புமாறு கனடிய முன்னணி ஊடகங்களும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் குரல் எழுப்பும்போது, “நாங்கள் அகதிகளைத் திருப்பி அனுப்ப மாட்டோம். உயிருக்குப் பயந்து அவர்கள் சுதந்திரத்தைத் தேடி வந்துள்ளனர். எமது முடிவில் தவறு இருந்தால் அது நியாயம் மற்றும் இரக்கத்தின் அடிப்படையில் எடுத்தது” என்று அப்போதைய கனடியப் பிரதமர் பிறையன் மல்றோனி (Brian Mulroney) ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய நேர்காணலில் கூறியிருந்தார்.

கனடாவின் 18ஆவது பிரதமராக 1984ஆம் ஆண்டில் இருந்து 1993ஆம் ஆண்டுவரை பதவி வகித்த பழமைவாதக் கட்சியைச் சேர்ந்த பிறையன் மல்றோனி 2024 பெப்பிரவரி 29இல் தனது 84ஆவது வயதில் அமெரிக்காவின் ப்ளோரிடா (Florida) மாநிலத்தில் Palm Beachஇல் உள்ள வைத்தியசாலையில் காலமானார். அவருக்கான இறுதிக்கிரியைகள் கனடிய அரச மரியாதையுடன் மொன்றியலில் மார்ச் 23ஆம் திகதி நடைபெற உள்ளது.

இலங்கை அகதிகள் படகில் வந்து இறங்கிய பின்னர் அப்போதைய பழமைவாதக் கட்சி அரசு அவர்களுக்கு கனடாவில் Minister's Permit வழங்கி தங்க அனுமதி அளித்தது. அப்போது Toronto Sun ஊடகம் ஆயிரத்திற்கு மேற்பட்டோர் தமது அலுவலகத்திற்குத் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி படகில் வந்த தமிழ் அகதிகளை நாட்டில் தங்க அனுமதித்ததற்கு கனடிய மத்திய அரசைக் கண்டித்தனர் எனத் தெரிவித்திருந்தது.

அப்போதைய பழமைவாதக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த Alex Kindy “தனக்கு தொடர்ந்து தொலைபேசி அழைப்புக்கள் மூலம் படகில் வந்த தமிழ் அகதிகளை நாட்டில் தங்க அனுமதித்தது தவறு எனப் பலர் கூறுகின்றனர்” என்றார். அவர் மேலும் தெரிவிக்கையில், “படகில் வந்தோர் கடற்கொள்ளையர்கள், அவர்களை வந்த அதே படகில் ஏற்றி அவர்கள் வீட்டிற்குத் திருப்பி அனுப்ப வேண்டும்” என்றார்.


Martin Brian Mulroney

அப்போதைய லிபரல் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான Sergio Marchi படகில் வந்த தமிழ் அகதிகளை தடுப்பு முகாமில் வைக்க வேண்டும் என்று கூறினார். இவ்வாறான எதிர்ப்புகளுக்கு மத்தியில் அப்போதைய பழமைவாதக்கட்சிப் பிரதமராக இருந்த பிறையன் மல்றோனி துணிவுடன் படகில் வந்த தமிழ் அகதிகளை ஏற்று அவர்களுக்கு கனடாவில் இருக்க மற்றும் வேலை செய்ய அனுமதி அளித்தார்.

அக்காலத்தில் பழமைவாதக்கட்சி அரசின் குடிவரவு அமைச்சராக இருந்த Gerry Weiner 155 இலங்கைத் தமிழ் அகதிகள் படகில் வந்திறங்கிய நிகழ்வின் 30ஆண்டு நிறைவை 2018 ஒகஸ்ரில் நினைவுகூரும் போது அப்போதைய பிரதமர் பிறையன் மல்றோனி எவ்வாறு தன்னுடன் கலந்து ஆலோசித்து இவ் அகதிகளுக்கு கனடாவில் தங்க வசதி செய்து கொடுத்ததை ஊடகங்களுக்கு விளக்கியிருந்தார்.

Martin Brian Mulroney குவிபெக் மாகாணத்தில் உள்ள Baie-Comeau நகரில் 1939 மார்ச் 20இல் பிறந்தார். இவரின் தாய் Mary Irene மற்றும் தந்தை Benedict Martin Mulroney. இவர்கள் ஐரிஸ் கனடியன் குடும்பத்தைச் சேர்ந்த கத்தோலிக்க மதத்தவர்கள். பிறையன் மல்றோனி பிறந்த இடத்தில் ஆங்கில மொழிப் பாடசாலைகள் இல்லாதபடியால் இவர் New Brunswick மாகாணத்தில் உள்ள ரோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் கல்வி பயின்று பின்னர் St. Francis Xavier பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்தில் பட்டம் பெற்றார். அவர் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் காலத்திலேயே பழமைவாதக்கட்சி உறுப்பினராகச் சேர்ந்து பழமைவாதக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆதரவாகப் தேர்தல் பிரசாரங்கள் செய்தார்.

1964இல் பிறையன் மல்றோனி தனது சட்டத் துறைப்படிப்பை Laval பல்கலைக்கழகத்தில் முடித்துக்கொண்டு மொன்றியலில் உள்ள சட்ட நிறுவனமான Howard, Cate, Ogilvy, et al இல் வேலைக்குச் சேர்ந்தார். 1965இல் குவிபெக் மாகாண சட்டத்தரணியானார். 1973 மே 26இல் Brian Mulroney, Mila Pivnickiஐத் திருமணம் செய்தார். இவர்கள் இருவருக்கும் Caroline, Benedict, Mark மற்றும் Nicolas என நான்கு பிள்ளைகள் இருக்கின்றனர்.


பிறையன் மல்றோனி 1976ஆம் ஆண்டில் இருந்து 1983ஆம் ஆண்டுவரை தொழில் அதிபராக மூன்று பெரிய அமெரிக்க எஃகு நிறுவனங்களின் கூட்டுத்துணை நிறுவனமான கனடாவின் இரும்புத்தாது நிறுவனத்தில் பணியாற்றினார்.

1983 ஜுன் 11இல் பிறையன் மல்றோனி கனடியப் பழமைவாதக்கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அப்போது அவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கவில்லை. அவர் கனடியப் பழமைவாதக்கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் இரண்டு மாதங்களில் வந்த ஓர் இடைத் தேர்தலில் பிறையன் மல்றோனி போட்டியிட்டு Nova Scotia மாகாணத்தில் உள்ள Central Nova தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். ஆங்கிலம் மற்றும் பிரஞ் மொழிகளில் சரளமாகப் பேசும் வல்லமையும், இரண்டு கலாசாரங்களிலும் இருந்த அனுபவமும் அவரை ஒரு முழுமையான அரசியல் வாதியாக உருவெடுக்க உதவின.

1984இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் கனடிய சரித்திரத்திலேயே அதிகூடிய (211) நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்று பிறையன் மல்றோனி கனடாவின் 18ஆவது பிரதம மந்திரியானார்.

பிறையன் மல்றோனி அரசாங்கத்தில் முக்கிய விடயமாக சுற்றுச்சூழல்

தொடர்ச்சி 05 பக்கம்



















LILY
ASPENRIDGE
A New Project
Competitive Pricing.
Exclusive offer for brokers — seize the opportunity now!
Limited Time Incentives
No Interim Occupancy
Only Final Closing
Only 5% Down per year
5% in 2nd years
5% in 3rd years
Free Assignments*
Capped Development Charges $ 0
FINAL CLOSING : SUMMER 2024
HOMELIFE
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2
Tel: 416-321-6969
* Independently owned and operated.



Available Till Midnight
Including Weekends & Holidays

# ANTON DHARMASEELAN

MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

## CALL ME FIRST
## FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

# 416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE

Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# தேர்தல் பத்திர விவகாரம் - இந்திய நாடாளுமன்ற தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்துமா?

இந்தியாவில் விரைவில் நாடாளுமன்றத் தேர்தல் நடக்க இருக்கும் நிலையில், பிரதமர் மோடியால் அறிமுகப்படுத்தப்பட்ட, தேர்தல் பத்திரம் திட்டம் மூலம் எந்த அரசியல் கட்சிக்கு எவ்வளவு நன்கொடைகள் கிடைத்தது என்ற விவரங்களை சமர்ப்பிக்கும்படி உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது, அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த விவகாரம் பாஜகவை எதிர்கொள்ள எதிர் கட்சிகளுக்கு எந்தளவு பயன்படும்? இது தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்துமா? தேர்தல் பத்திரம் என்றால் என்ன?

அரசியல் கட்சிகள், கட்சியை நடத்தவும் நிர்வாக செலவுகளுக்காகவும் பெரும் நிறுவனங்கள் மற்றும் மக்களிடமிருந்து நன்கொடை வாங்குவது இந்தியாவில் பல காலமாக நடந்து கொண்டிருப்பதுதான். ஆனால், இதில் யார் எந்தக் கட்சிக்கு எவ்வளவு நன்கொடை கொடுத்தார்கள் என்பதும், எந்தக் கட்சி யார் யாரிடம் இருந்து எவ்வளவு நன்கொடை பெற்றது என்பதும் கணக்கில் வரும். தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் இந்தியக் குடிமகன் ஒவ்வொருவரும் இதை தெரிந்து கொள்ள முடியும்.

இந்நிலையில், 2014இல் ஆட்சிக்கு வந்த மோடி அரசு 2017இல் தேர்தல் பத்திரம் என்னும் புதிய திட்டத்தை அறிவித்தது. இது ஓர் உறுதிமொழிப் பத்திரம் போன்றது. இந்த பத்திரங்கள் இந்திய ரூபாயில் 1,000 முதல் 1 கோடி வரையிலான பல்வேறு மதிப்புகளில் இருக்கும். இதை இந்தியாவின் எந்தவொரு குடிமகனும் அல்லது நிறுவனமும் அரசு வங்கியான ஸ்ரேற் பாங்க் ஒஃப் இந்தியாவின் (State Bank of India) தேர்ந்தெடுக்கப்பட்ட கிளைகளில் வாங்கலாம். தாங்கள் விரும்பும் எந்தவொரு அரசியல் கட்சிக்கும் தனது பெயரைக் குறிப்பிடாமல் இதன்மூலம் நன்கொடை அளிக்கலாம். இதனால், யார் எந்த கட்சிக்கு எவ்வளவு நன்கொடை கொடுத்தார்கள் என்கிற விவரத்தை தேர்தல் ஆணையம் உட்பட யாரும் தெரிந்துகொள்ள முடியாது.



இந்த திட்டத்தை அறிவித்தபோதே எதிர் கட்சிகள், சமூக ஆர்வலர்கள் மட்டுமல்லாமல் இந்திய தேர்தல் ஆணையமும் இந்திய ரிசர்வ் வங்கியும் இதனை எதிர்த்தது. எதிர்ப்புகளை பொருட்படுத்தாமல், மோடி அரசு இத்திட்டத்தை 2018 ஜனவரி 29ஆம் திகதி சட்டப்பூர்வமாக்கியது.

இதனையடுத்து, இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் நான்கு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்களை ஒன்றாக விசாரித்த உச்ச நீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் கொண்ட பிரிவு கடந்த மாதம், 'தேர்தல் பத்திரம் அரசமைப்பிற்கு விரோதமானது' என்று கூறி ரத்து செய்து தீர்ப்பளித்தது. மேலும், "ஏப்ரல் 12, 2019முதல் அதுவரை விற்கப்பட்ட பத்திரங்களின் விவரத்தை 2024 மார்ச் 6ஆம் திகதிக்குள் தேர்தல் ஆணையத்திடம் அளிக்க வேண்டும்" என்றும் ஸ்ரேற் பாங்க் ஒஃப் இந்தியாவுக்கு உத்தரவிட்டது.

## ஸ்ரேற் பாங்க் ஒஃப் இந்தியா என்ன செய்தது?

ஆனால், 04-03-2024 அன்று இது தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் ஸ்ரேற் பாங்க் ஒஃப் இந்தியா (எஸ்பிஐ) ரிட் மனு தாக்கல் செய்தது. அதில், 'தரவுகளை டிகோடிங் செய்வது மற்றும் அதற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள காலக்கெடுவுக்குள் அதைப் பூர்த்தி செய்வதில் சில நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. தேர்தல் பத்திரம் வாங்குபவர்களின் அடையாளத்தை ரகசியமாக வைத்திருக்கும் வகையில் பத்திரங்களின் விற்பனை மற்றும் அதைப் பணமாக்குவது தொடர்பான விரிவான நடைமுறையை வங்கி தயாரித்துள்ளது. நாடு முழுவதும் உள்ள வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட 29 கிளைகளில் இவை பின்பற்றப்படுகின்றன.

அதாவது, பத்திரம் வாங்குவோரின் அடையாளம் ரகசியமாக இருப்பதை உறுதி செய்வதற்காக, பத்திர வழங்கல் தரவு மற்றும் பத்திரத்தைப் பணமாக்கிய தரவு ஆகிய இரண்டும் தனித்தனி இடங்களில் பராமரிக்கப்படுகின்றன. தேர்தல் பத்திரங்கள் வாங்கப்பட்ட கிளைகளில் அதை வாங்கியவர்களின் தகவல்கள் சீல் செய்யப்பட்ட கவரில் வைக்கப்படும். பின்னர் இந்த சீல் செய்யப்பட்ட கவர்கள் மும்பையில் உள்ள எஸ்பிஐ வங்கியின் பிரதான கிளைக்குக் கொடுக்கப்படும்.

தேர்தல் பத்திரம் மூலம் நன்கொடை பெற ஒவ்வொரு அரசியல் கட்சியும் அங்கீகரிக்கப்பட்ட 29 கிளைகளில் ஏதேனும் ஒன்றில் கணக்கு வைத்திருக்க வேண்டும். இந்தக் கணக்கில் மட்டுமே அந்தக் கட்சி பெற்ற தேர்தல் பத்திரங்களை டெபாசிட் செய்து பணமாக்க முடியும். இங்ஙனம் பணமாக்கலின்போது, அசல் பத்திரம், பே-இன் ஸ்லிப் ஆகியவை சீல் செய்யப்பட்ட கவரில் மும்பையில் உள்ள எஸ்பிஐ கிளைக்கு அனுப்பப்படும்.

இங்ஙனம், இரண்டு தகவல் தொகுப்புகளும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் தனித்தனியாகச் சேமிக்கப்பட்டுள்ளன. இப்போது அவற்றைப் பொருத்துவது, அதிக நேரம் தேவைப்படும் பணியாக இருக்கும்.

பத்திரங்களை யார் வாங்கினார்கள் என்பது பற்றிய தகவலை வழங்க ஒவ்வொரு பத்திரத்தின் வெளியீட்டு திகதியுடன் நன்கொடையாளர் வாங்கிய திகதியைப் பொருத்த வேண்டும். இரண்டு வெவ்வேறு தரவுத் தொகுப்புகள் இருப்பதால் நாங்கள் 44,434 செட் தகவல்களை டிகோட் செய்ய வேண்டும், பொருத்திப் பார்த்து அவற்றை ஒப்பிட வேண்டும். எனவே, தீர்ப்பில் நிர்ணயம் செய்யப்பட்ட மூன்று வார கால அவகாசம், முழு செயல்முறையையும் முடிக்கப் போதுமானதாக இருக்காது. மேலும் உத்தரவைக் கடைப்பிடிக்க எங்களுக்கு ஜூன் மாதம்வரை கூடுதல் அவகாசம் வழங்கப்பட வேண்டும்" என்று எஸ்பிஐ தெரிவித்துள்ளது.

## எதிர்கட்சிகள் விமர்சனம்

ஜூன் மாதம்வரை கால அவகாசம் கேட்டு எஸ்பிஐ தாக்கல் செய்த இந்த மனுவை எதிர்கட்சிகள் கடுமையாக விமர்சித்துள்ளன. "மக்களவை தேர்தலைக் கருத்தில் கொண்டே எஸ்பிஐ இவ்வாறு தெரிவித்துள்ளது ஏனெனில், ஜூன் மாதம் தேர்தல் முடிந்துவிடும்" என்பது அவர்களது வாதம்.

"22,217 பத்திரங்களை வாங்கியவர்களின் விவரங்களை, பணமாக்கல் விவரங்களுடன் பொருத்த நான்கு மாத கால அவகாசம் தேவை என்று வங்கி கூறுவது முட்டாள்தனமானது. பத்திரங்கள் வாங்கப்பட்டது மற்றும் அதைப் பணமாக்கியது ஆகிய இரண்டு தகவல்களுமே சீல் செய்யப்பட்ட உறைகளில் மும்பை கிளையில் உள்ளன. இந்த விவரம் வங்கி சமர்ப்பித்துள்ள வாக்குமூலத்தில் உள்ளது. எனவே, வங்கி உடனே இந்தத் தகவல்களை ஏன் வெளியிட முடியாது?" என்று ஆர்டிஐ ஆர்வலர் அஞ்சலி பரத்வாஜ் கேள்வி எழுப்பியுள்ளார்.

"நன்கொடையாளர்களின் தகவல்களைத் தெரிவிக்க எஸ்பிஐ, தேர்தலுக்குப் பிறகு வரை கால அவகாசம் கேட்பது, தேர்தலுக்கு முன்புவரை மோடியின் உண்மையான முகத்தை மறைக்கும் கடைசி முயற்சி. நன்கொடை வியாபாரத்தை மறைக்க நரேந்திர மோடி தனது முழு பலத்தையும் பயன்படுத்தியுள்ளார். ஒரே கிளிக்கில் பெறக்கூடிய தகவல்களுக்காக ஜூன் 30ஆம் திகதிவரை அவகாசம் கேட்பது முழு பூசணிக்காயை சோற்றில் மறைப்பதுபோல் இருக்கிறது. நாட்டின் ஒவ்வொரு சுதந்திர அமைப்பும் 'மோதானி குடும்பமாக' மாறி அவரது ஊழலை மறைக்க முயல்கின்றன.

"தேர்தல் பத்திரங்கள் குறித்த உண்மையைத் தெரிந்துகொள்வது நாட்டு மக்களின் உரிமை என்று உச்சநீதிமன்றம் கூறியுள்ள நிலையில் இந்தத் தகவலை தேர்தலுக்கு முன் பகிரங்கப்படுத்தக் கூடாது என்று எஸ்பிஐ ஏன் விரும்புகிறது?" என்று காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

எஸ்பிஐயின் மனு குறித்து அதிருப்தி தெரிவித்துள்ள சிபிஐஎம் பொதுச் செயலர் சீதாராம் யெச்சூரி, "இது நீதியைக் கேலி செய்வதாகும். மக்களவை தேர்தலில் பாஜகவையும் மோடியையும் காப்பாற்றவே எஸ்.பி.ஐ கூடுதல் கால அவகாசம் கேட்கிறதா?" என்று எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

"எதிர்பார்த்தபடியே மோடி அரசு எஸ்பிஐ மூலம் மனு தாக்கல் செய்து தேர்தல் பத்திரம் வாங்குவோர் குறித்த தகவல்களை வெளியிட தேர்தல் முடியும்வரை அவகாசம் கோரியுள்ளது. இந்தத் தகவல் இப்போது வெளிவந்தால் லஞ்சம் கொடுத்த பலர் பற்றியும், அவர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகளின் விவரங்களும் அம்பலமாகும்" என்று உச்ச நீதிமன்றத்தின் பிரபல மற்றும் மூத்த வழக்கறிஞரான பிரசாந்த் பூஷண் கூறியுள்ளார்.

வங்கித்துறையில் பணியாற்றியவரும் தமிழ் நாடு அமைச்சருமான பழனிவேல் தியாக ராஜன், "இன்றைய கணினி யுகத்தில் தேர்தல் பத்திரங்கள் மூலம் கட்சிகளுக்கு நன்கொடை வழங்கியவர்கள் தரவுகளை சேகரிக்க 2 நிமிடங்கள்கூட ஆகாது. அதற்கு 4 மாதம் தேவை என SBI கால

(தொடர்ச்சி 08ஆம் பக்கம்...)

விளம்பரம்
VLAMBARAM
34ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: சுதர்சினி D.
'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.
Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave. E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL: 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# அகதிகளை...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

பாதுகாப்பு இருந்தது குறிப்பிடத்தக்கது. அவருடைய காலத்தில் கனடாவில் எட்டு புதிய தேசிய பூங்காக்கள் அமைக்கப் பட்டன. அப்போது கனடிய மத்திய அரசால் கனடிய சுற்றுச்சூழல் மதிப்பீட்டுச் சட்டம் மற்றும் கனடிய சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் ஆகிய இரண்டும் அமலாக்கப்பட்டு தற்போதும் அவை சில திருத்தங்களுடன் நடைமுறையில் உள்ளன.

1987இல் மொன்றியல் நகரில் கனடிய அரசு ஒரு சர்வதேச காலநிலை மாநாட்டை நடத்தியது. அங்கு 46 நாடுகள் குளோரோபுளோரோகாபன் (CFC) பயன் பாடுகளையும் அதன் உற்பத்தியை யும் கட்டுப்படுத்தும் உடன்படிக்கையில் கையொப்பம் இட்டன. CFC பயன்பாடு ஓசோன் (Ozone) படலத்தில் ஒரு துவாரத்தை உருவாக்குகிறது என்ற கண்டுபிடிப்பின் பின்னரே இந்த சர்தேச ஒப்பந்தத்தை அப்போதைய கனடிய அரசு உருவாக்கியது.



Canadian Prime Minister Brian Mulroney & his wife Mila, U.S. President Ronald Reagan & First Lady Nancy

1986ஆம் ஆண்டில் பிறையன் மல்றோனி அரசு அப்போதைய அமெரிக்க அதிபர் Ronald Reaganஉடன் அமில மழையை ஏற்படுத்தும் காற்றில் உள்ள மாசுக்களை (சல்பர் டைஓக்சைட் மற்றும் நைட்ரஜன் ஒக்சைட்) குறைக்கப் பேச்சு வார்த்தை களை நடத்தியது. பின்னர் 1991ஆம் ஆண்டில் அமெரிக்க அதிபர் George H.W. Bushஉடன் சேர்ந்து பிறையன் மல்றோனி அமில மழையை ஏற்படுத்தும் காற்றில் உள்ள மாசுக்களை கட்டுப் படுத்தும் காற்றின் தராதரத்தை பாது காக்கும் (Air Quality Agreement) அமெரிக்க-கனடிய ஒப்பந்தத்தை உருவாக்கினார்.

1992ஆம் ஆண்டில் பிரேசிலில் நடை பெற்ற சர்வதேச மாநாட்டில் பருவநிலை மாற்றத்திற்கான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பை உருவாக்க பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தை சுற்றுச்சூழலுக்கு உகந்தநிலைக்குக் குறைக்க பிறையன் மல்றோனியின் தலைமையிலான கனடிய அரசு வழிவகுத்தது.

**உறுதியுள்ளவன்,**
**உள்ளத்தில் திடமுள்ளவன்**
**உலகைத்**
**தனக்கு வேண்டிய முறையில்**
**அமைத்துக் கொள்கிறான்.**

தென்னாபிரிக்காவின் நிறவெறி ஆட்சியை பிறையன் மல்றோனியினுடைய அரசு எதிர்த்தது. 1985ஆம் ஆண்டில் இருந்தே



Nelson Mandela & Brian Mulroney - 1990.
Thanks: Radio-Canada

தென்னாபிரிக்காவில் நிறவெறியை முடிவுக்கு கொண்டுவரவும், நிறவெறி எதிர்ப்பாளரான நெல்சன் மண்டேலாவை சிறையில் இருந்து விடுவிக்கவும், தென்னாபிரிக்க அரசுக்கு எதிராக பொருளாதாரத்தடைகளை கொண்டுவரவும் பிறையன் மல்றோனியினுடைய கனடிய அரசு பொதுநலவாய நாடுகளை வற் புறுத்தியது. இதற்கு அப்போதைய பிரித்தானிய பிரதமராக இருந்த மார்க்ரட் தட்சர் உடன்படவில்லை. பொருளாதாரத் தடை பிரித்தானியாவிற்கும், தென்னா பிரிக்காவிற்கும் இடையேயான வர்த்தகத்தைப் பாதிக்கும் என்பதாலேயே பிரித்தானியப் பிரதமர் இதற்கு உடன்பட வில்லை.

1985இல் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக் கூட்டத்தில் பிறையன் மல்றோனி உரையாற்றும்போது, "நிறவெறியை அகற்றுவதில் எந்த ஒரு முன்னேற்றமும் இல்லை என்றால் தென்னாபிரிக்காவு டனான உறவுகளை கனடா முற்றிலும் துண்டிக்கும்" என்றார். இந்த வசனத்தை கனடிய வெளிவிவகார அமைச்சு கனடியப் பிரதமரின் உரையில் இருந்து நீக்கி யிருந்தது. ஆனால், பிறையன் மல்றோனி உரையாற்றும்போது அதைச் சேர்த்து உரையாற்றியிருந்தார்.

1986இல் கனடாவின் வற்புறுத்துதலின் பேரில் பொதுநலவாய நாடுகள் தென்னா பிரிக்காவின் மீது 11 புதிய தடைகளை அமல்படுத்தியது. 1990 பெப்பிரவரி 11இல் நெல்சன் மண்டேலா சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டார். அடுத்தநாள் நெல்சன் மண்டேலா பிறையன் மல்றோனிக்குத் தொலைபேசியில் தொடர்புகொண்டு, தென் னாபிரிக்காவில் நிறவெறியை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு அவர் எடுத்த முயற்சிகளுக்கு நன்றி தெரிவித்தார். 1990 யூன் 18இல் நெல்சன் மண்டேலா கனடிய நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது பிறையன் மல்றோனி மற்றும் கனடியர் களுக்குத் தனது நன்றியைத் தெரிவித்தார். கனடிய நாடாளுமன்றமே நெல்சன் மண்டேலா உலகில் முதன் முதலில் உரையாற்றிய சட்டமன்றமாகும்.

கனடிய-அமெரிக்க உறவைப் புதுப்பிப்ப தாக உறுதியளித்து 1984இல் பதவிக்கு வந்த பிறையன் மல்றோனி அமெரிக்கா வுடனான ஒரு தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை 1987 ஒக்ரோபரில் நிறை வேற்றினார். இவ் ஒப்பந்தம் கனடிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டாலும் கனடிய மேற்சபையில் நிறைவேற்றப்பட வில்லை. இதனால், நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு 1988 நொவம்பர் 21இல் கனடியப் பொதுத்தேர்தல் நடைபெற்றது. அமெரிக்காவுடனான ஒரு தடையற்ற வர்த்தக உடன்படிக்கை கனடாவின் இறையாண்மையைக் குறைத்து நாட்டை அமெரிக்காவின் 51ஆவது மாநிலமாக மாற்றும் என எதிர்க்கட்சிகள் தீவிர பிரசாரம் மேற்கொண்டன. ஆனால், பிறையன் மல்றோனியினுடைய பழமை வாதக்கட்சி 169 ஆசனங்களைப்பெற்று (மொத்த ஆசனங்கள் 295) மீண்டும் பெரும் பான்மை அரசாக ஆட்சி அமைத்தது. அதன்பின்னர் பிறையன் மல்றோனியினுடைய கனடிய அரசு 1989



The Mulroney family 1991
Clover the dog, Caroline, Mark, Brian, Nicolas, Benedict, & Mila.

ஜனவரி 01இல் அமெரிக்காவுடனான ஒரு தடையற்ற வர்த்தக உடன்படிக்கையை அமல்படுத்தியது.

அமெரிக்காவுடனான இந்த ஒரு தடையற்ற வர்த்தக உடன்படிக்கையின் பின்னர் இரு நாடுகளுக்குமிடையேயான வர்த்தகம் மிகவும் சிறப்பான முறையில் வளர்ச்சி யடைந்தது. இது பிறையன் மல்றோனியின் தீர்க்க தரிசனத்திற்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

1989 ஒகஸ்ற் இல் பிறையன் மல்றோனி யினுடைய அரசு பொருட்கள் மற்றும் சேவைக்கான வரி (GST)ஆக 9%ஐ விதித்தது. இது ஏற்கனவே மறைமுகமாக உற்பத்திப் பொருட்கள்மீது விதிக்கப்பட்டி ருந்த 13.5% வரியை (MST) நீக்கி வெளிப்படையாக 9%ஆகப் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு விதிக்கப்பட்டிருந் தாலும் இது பொதுமக்களிடம் செல்வாக்குப் பெறவில்லை.

1993 பெப்பிரவரி 24இல் பிறையன் மல்றோனி பிரதமர் பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்தார்.

பிரதமர் பதவியில் இருந்து விலகிய பின்னர் அடுத்த தேர்தலில் பதவியேற்ற லிபரல் அரசு கனடாவிற்கு ஏயர்பஸ் விமானங்கள் கொள்முதல் செய்யும்போது ஜெர்மன்-கனடியத் தொழிலதிபர் Kartheinz Schreiberஇடம் இருந்து பிறையன் மல்றோனி இலஞ்சம் பெற்றிருந்தார் எனக் குற்றம் சாட்டி வழக்குத் தாக்கல் செய்தது. முதலில் பிறையன் மல்றோனி இதனை எதிர்த்து வாதாடியிருந்தாலும் பின்னர் தான் $225,000 அடங்கிய பண உறையை Kartheinz Schreiberஇடம் இருந்து பெற்றுக்கொண்டதை ஒப்புக் கொண்டார்.

தற்போதைய கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ அமெரிக்காவுடனான தடையற்ற வர்த்தக உடன்படிக்கையை புதுப்பிக்க அமெரிக்க அதிபர் Donald Trumpஉடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது பிறையன் மல்றோனியிடம் ஆலோசனையைப் பெற்றிருந்தார்.


R R
THE ROSE ROOM
SWEET TREATS
cakes
cupcakes
cake pops
FLORAL
bouquets
bridal floral
non-bridal floral

PICK-UP & DELIVERY AVAILABLE
@the.roseroom.to
t:647.678.0921 / 647.654.7344

# புகழ் உயர்ச்சியின் ஏணிப்படி – நாடும் நடப்பும்



சி. நற்குணலிங்கம்
நெல்லியடி - இலங்கை

நம்முடைய நற்குணங்கள், நற்செயல்கள், நன்னடத்தைகள் இவை நமக்கு சமுதாயத்தில் தேடித்தரும் மரியாதைதான் புகழ் ஆகும். புகழ் அனைவராலும் போற்றப்படும் நிலை. உங்களால் தாங்க முடிந்த அளவுக்கு உயர்த்தும் ஒருவன் தன் நற்குணங்களாலும், நற்செயல்களாலும் உலகத்திற்கு பயன் உண்டாக வாழ்ந்தால் போற்றப்படுவான். அவன் உயர்த்திக் கூறப்பட்டு நற்பெயர் பெறுவது புகழ் என அழைக்கப்படுகிறது. நல்லவர்களால் போற்றப்படுவதே புகழ். புகழப்படுபவன் வாழ்க்கை அர்த்தமுள்ள வாழ்க்கையாகக் கருதலாம். “புகழின் பின்னால் நீ போனால் அது பொய்மான். உன் பின்னால் புகழ் வந்தால் அது உண்மைதான். அப்போது தான் நீ அதற்கு எஜமான்” இது வைர முத்துவின் முத்து. புகழுக்காக எந்த இடத்திலும் மண்டியிடாதே. புகழைத் துரத்திச் செல்பவர்கள்தான் அதிகம். இதற்காக நேரத்தை விரயமாக்குவோர் அதிகம்தான். புகழைப் பெறுவது வேறு, வாங்குவது வேறு. புகழை வாங்க முனையாதே பெற்றுக்கொள். மனிதன் வாழ்கிறான் என்பதற்கு அடையாளமே புகழ் பெறுதலாகும்.

பொன் ஆபரணத்தைப் பார்க்கிலும், புகழ் ஆபரணமே பெரிது. அத்திப் பழத்தில் தோன்றி மறையும் கொசுக்களைப்போல் அல்லாமல் “தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று” “மனிதனாகப் பிறந்தவன் பயனின்றி அழியக் கூடாது” கார்ல்மார்க்ஸ் கருத்து. “பலர் பிறப்பதற்கும், புதைப்பதற்கும் நடுவில் மரித்துப் போகின்றனர்” இது பெர்னாட்ஷா பொன்மொழி. அவ்வாறு இல்லாமல் புகழோடு மறையவேண்டும். மறைந்த பின்னும் புகழ் மறையாது இருக்க வேண்டும். “எனக்கு எதுவும் தெரியாது என்பது எனக்குத் தெரியும், ஏனெனில் நான் ஓர் அறிவாளி” இது சாக்கிரடீசின் புகழ் பெற்ற தத்துவம். “நல்லவர்களுக்கு சட்டங்கள் தேவையில்லை. ஏனெனில் அவர்கள் பொறுப்புடன் வாழ்வர். கெட்டவர்கள் தங்களுக்கே உரிய சட்டத்தை உருவாக்கிக்கொள்கின்றனர்” என்பது பிளேட்டோவின் புகழ் தத்துவம். “நீங்கள் யாருக்கும் உதவி செய்ய முடியாது. சேவை மட்டுமே செய்ய முடியும்” என்பது விவேகானந்தரின் புகழ் பெற்ற கருத்து. இவை இன்றும் பேசப்படுகிறது. ஆள் மறைந்தாலும் அவரின் புகழ்பெற்ற கருத்துக்கள் இன்றும் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன.



தனக்கு இகழ்ச்சி நேராவண்ணம் ஒழுகுதல் புகழ் ஆகும். ஒப்புரவு, கல்வி, வீரம், செல்வம் ஈட்டுவது, நிர்வாகத்திறன், ஆட்சிமுறை இவற்றாலும் புகழ் சேரும். புகழுக்கு உரிய பண்புநலன்கள் வெளிப்படாமலோ அல்லது செயல்கள் ஆற்றாமலோ பெயர்பெற முடியாது. புகழ் பெறுவது மட்டுமல்லாமல் இகழ்ச்சி நேராமலும் காத்துக்கொள்ள வேண்டும். உலகில் பொன்றாது நிற்பது புகழ் ஒன்றுதான். இறந்தபின் ஒருவன் புகழாகப் பேசப்படாவிட்டால் அவன் இகழப்பட்டவன் என்பதாகிறது. அன்பு காட்டுவது, விருந்தோம்பல், உதவுதல், நடுநிலையாக செயற்படல், அடக்கம், ஒழுக்கம், பொறை ஆகியவற்றைப் போற்றுவது, பிறனில் விழையாமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங்கூறாமை, கொல்லாமை, தீவினை செய்யாமை போன்ற அறங்களை ஏறு ஒழுகுதல் ஆகிய பண்புகளை உடையவனுக்குப் புகழ் தானே வந்து சேரும்.

புகழைத்தேடி அலைவோர் மத்தியில் அமைதியும், நேர்மையும் இருப்பதில்லை. வாழ்வில் தள்ள வேண்டியவை நான்கு. அவையாவன: பதவியால் வரும் கர்வம், புகழால் வரும் மயக்கம், அறிவால் வரும் செருக்கு, பணத்தால் வரும் போதை. புகழ் இரண்டு வகை பெற்றுச் சாவது, செத்துப் பெறுவது. இது கண்ணதாசனின் அனுபவ மொழி. புகழைத்தேடிச் சென்றால்,தேவைப் பட்டால் புகழுவர். தேவை இல்லையாயின் தூரவைப்பர். எனவே புகழ் எம்மைத் தேடி வரவேண்டும். நல்ல சிந்தனைகள் புகழைத் தேடித்தரும். அளவுக்கு மிஞ்சிய புகழ் போதையைத் தரும், நிதானத்தை அழிக்கும். முசோலினியின் வீழ்ச்சிக்கு இதுதான் காரணம். என்ன வேலை செய்தாலும் வேலையில் நிதானம் வேண்டும். வேலை செய்வோரில் இரண்டு வகையினர், வேலையை விருப்போடு, ஈடுபாட்டுடன் செய்வோர். இவர்கள் வேலைப் பிரியர்கள் (WORK LOVER). அடுத்தவர்கள் வேலை வெறியர்கள் (WORK AHOLIC ). இவர்கள் மற்றவர்கள் தங்களைப் புகழ வேண்டும், அவர் கடுமையாக உழைக்கிறார் என்ற எண்ணம் எல்லோருக்கும் ஏற்பட வேண்டும் என்ற வெறி உள்ளவர்கள். தவறான வழியில் சென்று தேடிக்கொள்ளும் புகழ் தற்காலிகமானவை தான். தற்காலிக புகழுக்கு ஆசைப்பட்டு நிரந்தர குறைபாடுகளை தேடிக்கொள்ளக் கூடாது. தகுதி இல்லாதவனை எந்தச் சந்தர்ப்பத்திலும் புகழக்கூடாது. மற்றவன் புகழப்படுகிறான், அதேபோன்று நானும் புகழப்படவேண்டும் என்று நினைக்கக் கூடாது. எனக்கு அது கிடைக்கவில்லை என ஏங்கக்கூடாது. கிடைப்பன அதுவே என்று நினைப்பதே அறிவுடைமை. முற்றிய நெற்கதிர் தலை சாய்ந்து நிற்கும். அதே போன்று அறிவுடையோர் எப்போதும் தம்மைப்பற்றி புகழமாட்டார், பெருமை பேசமாட்டார்.

ஆக்கபூர்வமான செயலைச் செய்வோர் புகழப்படுவர். எதிர்மறை சிந்தனை உடையோர் புகழப்படாது, இகழப்படுவார்கள். படைப்பாற்றல் கொண்டவர்களும் புகழப்படுவர். மதிக்கப்படுபவர்கள் புகழப்படுவர். புகழப்படுபவர்கள் மதிக்கப்படுகின்றனர். புகழ்ச்சிக்கு உள்ளாகுவோர் சமூகத்திற்கு வெளிச்சம் போட்டுக்காட்டப்படுவர். பல தோல்விகளை சந்தித்து இறுதியில் புகழ் பெற்றவர்கள் பலர். “தோல்வியில் புதிய வழிகளைக் கண்டுபிடித்தேன்” என்றார் தோமஸ் எடிசன். உன்னைப் புகழ்பவரிடம் தாழ்ந்து பேசணும், உன்னை இகழ்பவரிடம் வாழ்ந்து பேசணும். நேர்மைக்கு என்றும் இல்லை இகழ்ச்சி, புகழ்ச்சியே. “ஒரு மனிதன் எப்படி இறந்தான் என்பது முக்கியமன்று. அவன் எப்படி வாழ்ந்தான் என்பதுதான் முக்கியம்” என்கிறார் சாமுவேல் ஜோன்சன். புகழைப் பெறுவது என்பது இலகுவான காரியம் இல்லை. வாழ்ந்தால் புகழொடு வாழவேண்டும். புகழுடன் வாழ்பவரே நல்வாழ்க்கை வாழ்பவர். துர்க்குணம் உடையவர் எந்தச் சந்தர்ப்பத்திலும் புகழ்ச்சிக்கு ஆளாகுவது இல்லை. மனிதராகப் பிறந்தவர்கள் புகழுடன் வாழ நல்லதே செய்ய வேண்டும். பணம், பதவியால் வருவதல்ல புகழ். பொருத்தமற்றவர்களை புகழ்வதால் நமது சுயமதிப்பை நாமே காயப்படுத்தி விடக்கூடாது. உயிருக்கு மதிப்பு உண்டு. இறந்தவுடன் கண்ணீர் சிந்தும் உள்ளங்களின் எண்ணிக்கையைப் பொறுத்து அவனது புகழை மதிப்பிடலாம். புகழப்படுவோர் எப்போதும் உற்சாகமாக இருக்கப் பழகிக்கொண்டவர்கள். புகழ் என்ற சொல்லுக்குள் அடங்காதவனுக்கு பகலும் இரவுதான். நீ பெறும் புகழை முடிவு செய்யவேண்டியது நீதான். உன்னைச் சுற்றி இருப்போர் அல்ல.

“வசைஇலா வண்பயன் குன்றும் இசை இலா யாக்கை பொறுத்த நிலம்” புகழ் பெறாமலேயே வாழ்ந்தவரின் உடம்பைச் சுமப்பதைப் பாவம் என்று கருதி நிலம் இழந்துவிடும். “வசைஎன்ப வையத்தார்க்கு எல்லாம் இசைஎன்னும் எச்சம் பெறா அவிடின்” மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் புகழ் பெறக்கூடிய பிள்ளைகளையே பெறவேண்டும். அப்படி இல்லையெனில் அவர் பிறப்பே குற்றமாகும். மற்றவர்கள் புகழும்படி வாழாதோர் தம்மையே நொந்து கொள்ளவேண்டுமேதவிர குறை சொல்பவரை நொந்து என்ன பயன்? மனிதராகப்

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)



# KOKUVIL HINDU COLLEGE
## OLD STUDENTS' ASSOCIATION CANADA

ESTD 1994

**இரா போசன விருந்துடன்,**
**மாபெரும் இன்னிசை நடன நிகழ்வு**

APRIL 6 2024

# மகுடம்
# MAHUDAM 2024



Metropolitan Center- Banquet Hall In Scarborough.
3840 Finch Ave E, Toronto, ON M1T 3T4

**கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா**

# நாமும் நமது இல்லமும் 650

# Apartment Rent Vs Condo. Rent




அண்மைக்காலமாக அதிகமான புதியவர்கள் கனடாவிற்குள் வந்ததனால், வாடகைக்குத் தகுந்த ஆதனத்தைப் பெறுவதில் மிகப் பெரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதனால் வாடகையின் பெறுமதி அதிகரித்து வருவதனால் கனடிய மக்கள் தமது மற்றைய தேவைகளிற்குப் போதியளவு பணம் இல்லாமல் இருப்பதாக இன்றைய புள்ளி விபரங்கள் காட்டு கின்றன. குறிப்பாக புதிதாக மாணவர் களாக கனடாவிற்கு வந்தவர்களின் நிலைமை மிகவும் மோசமாக இருப்பதாக தெரிய வருகின்றது. இது ஓர் ஆரோக்கியமான சமூகத்திற்கு சிறந்த தல்ல. இவ்வாறான நிலைப்பாடு சமுதாய நெருக்கடியை உருவாக்கலாம் என சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். Purpose built rentals என அழைக்கப்படும் அடுக்குமாடிக் (Apartments) கட்டிடத் தொகுதியின் வாடகையை நோக்கி மக்கள் அதிகம் செல்வதாகத் தெரிய வருகின்றது. அடுக்குமாடி கட்டிடத்தொகுதியை நோக்கி வாடகைக்கு செல்வோரின் எண்ணிக்கை அடுக்குமாடி மனை (Condominium Apartment Units) அல்லது சாதாரண வீடுகளைவிட அதிகமாக செல்வதற்குப் பல காரணங்கள் உண்டு.

கனடாவில் குறிப்பாக, வாடகைக்குரிய அடுக்குமாடி (Purpose built Rental) கட்டிடத் தொகுதிகள் பழமையானவை. அநேகமாக 1990ஆம் ஆண்டுகளிற்கு முன்பாகக் கட்டப்பட்டவை. இவை பழைய தொகுதிகள். வாடகை பொதுவாக குறைவாக இருக்கும். அத்துடன் வாடகை அதிகரிப்பு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது (Rent Control).

நவம்பர் 15, 2018இற்கு முற்பட்டதாக வாடகையாளர்கள் குடிபெயர்ந்த வீடு மற்றும் மனைகளிற்கு வாடகை அதிகரிப்பு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

வருடாவருடம் மாகாண அரசு கொடுக்கும் பெறுமதியைவிட மேலதிகமாக வாடகையை அதிகரிக்க முடியாது. உதாரணமாக 2024இன் ஆகக்கூடிய வாடகை அதிகரிப்பு 2.5%.

அதாவது, வாடகை $2000ஆக இருந்தால் அதிகூடிய வாடகை அதிகரிப்பு $50 மட்டுமே. அத்துடன் இந்தவகை அடுக்குமாடி வாடகைத் தொகுதி அலகுகள் / கட்டிடங்கள் அனுபவமிக்க ஒரு நிறுவனத்தால் எப்பொழுதும் பராமரிக்கப்படும். ஆனால், அடுக்கு மனைகள், பொதுவாக குறிப்பிட்ட நபர்களால் (Owners) அல்லது அவர்களின் பிரதிநிதிகளால் (Relators) பராமரிக்கப்படும்.

1990ஆம் ஆண்டுகளுக்குப் பிற்பாடு Purpose built rentalsகளின் நிர்மாணம் மிகப்பெரிய அளவில் குறையத் தொடங்கி விட்டது.



அடுக்கு மாடி மனைகளில் (Condominium Unit) முதலீட்டாளர் களுக்கு அதிக வருமானம் வந்ததனால், அதனை நோக்கி அவர்கள் முதலீடு செய்ததனால் Purpose Built Rentals குறைந்து விட்டது. அண்மையில் மாகாண அரசு Purpose Built Rentals கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்கு பல சலுகைகளை அறிவித்துள்ளது. இதன் அனுகூலம் எவ்வாறு இருக்கும் என எதிர்காலத்தில்தான் தெரியவரும்.

அண்மைக்காலத்தில் வாடகைக்கு வருவோர் குறிப்பிட்ட மனை மற்றும் வீடு வாடகை மட்டுப்படுத்தப்பட்டதா (Rent Control) என்பதில் மிகவும் கவனமாக உள்ளனர். ஏனெனில், வாடகை மட்டுப் படுத்தப்படாமல் இருப்பின், பேராசையான முதலீட்டாளர்கள் வாடகையை நியாயமற்ற முறையில் அதிகரிப்பதனையும் காணலாம்.

அதிகமான மாணவர்களின் அண்மைக் கால வரவு, Visitor Visaவில் வந்தவர்களில் பெரும்பாலோர் சிலகாலம் இங்கு தங்கி தொழில் புரிவதற்காக (Temporary Workers) வருபவர்கள், புதிய வரவாளர்கள் (Permanent Residences) போர் நடக்கும் நாடுகளில் இருந்து புலம் பெயர்ந்து (அகதிகளாக) வருபவர்கள் போன்றவர்களின் எண்ணிக்கை அதிகரிப்ப தால் வாடகைக்குத் தேடுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்தே வருகின்றது.


எதிர்காலத்தில் இவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்றே தெரிய வருகின்றது. இதனால் வாடகைக்கு நெருக்கடி தொடர்ந்து இருக்கும் என எதிர் பார்க்கலாம். ஒன்ராறியோ அரசு, இந்த நெருக்கடியை குறைப்பதற்கு பல சலுகைகள் வழங்குவதுடன் பல மாற்றங் களையும் செய்து வருகின்றது. எனினும் உள்ளூராட்சி அரசுகளின் மெத்தனப் போக்கால் காலம் தாழ்த்தப்படுவதனை யும் காணக்கூடியதாக உள்ளது.

சகல அரசுகளும் சேர்ந்து முடிவுகளை எடுக்காமல் இருந்தால், நிலைமைகளை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவது அவ்வளவு இலகுவாக இருக்க முடியாது. வாடகை அதிகரிப்பதால், ஆதன விலையும் அதிகரிக்கும். நீண்ட காலத்தின் ஆதன விலையும் அதிகரித்தே செல்லும் என்பதும் தவிர்க்க முடியாதது.

# நாடாளுமன்ற...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

அவகாசம் கோரியுள்ளது மிகவும் கேவலமானது. தரவுகளை நாளைக்கே சமர்ப்பிக்க நீதிமன்றம் உத்தர விட்டாலும், அதனை வழங்கும் திறனை SBI வங்கி கொண்டிருக்க வேண்டும். இல்லை யென்றால் அவர்கள் வங்கி தொழிலிலேயே இருக்கக் கூடாது. 1.5 கோடி மதிப்புள்ள சிஸ்டங்களை நிறுவிய பிறகு, 3 வாரங்களில் நன்கொடையாளர் கள் மற்றும் பெறுநர்களின் பட்டியலை SBI உருவாக்க முடியாது? SBIக்கு இது வெட்கமற்ற கேலிக்கூத்து... வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது. ஒரு தேசத்தின் மிகப்பெரிய வங்கி.. இவ்வளவு ஆழத்தில் மூழ்கியது ஒரு சோகம் அளிக் கிறது" என்று பிடிஆர் தெரிவித்துள்ளார்.






**தேர்தல் பத்திரம் விவரங்களை மறைக்க மோடி ஏன் விரும்புகிறார்?**

எதிர்கட்சிகள் விமர்சனம் ஒரு பக்கம் இருக்க, பிடிஆர் பழனிவேல் தியாகராஜன் சொல்வதுபோல, இன்றைய இணைய உலகில் ஒரு வங்கி இது தொடர்பான தன் வரவு-செலவுக் கணக்கை சமர்பிக்க சில நிமிடங்கள் போதும் என்பது சாமானி யர்களே தெரிந்துள்ள விடயம். ஆனாலும், எஸ்பிஐ தேர்தல் முடியும்வரை அவகாசம் கேட்பது, பிரதமர் தலையீட்டால்தான் என்பதையும் அவர்கள் உணர்ந்திருப்பர்.

**சரி, மோடி ஏன் தேர்தல் பத்திரம் விவரங்களை தேர்தல்வரை மறைக்க விரும்புகிறார்?**

தேர்தல் பத்திரம் மூலம் அனைத்து அரசி யல் கட்சிகளும் நன்கொடை பெற்றுள்ளன என்றாலும் பெரும்பான்மை பாஜகவுக்கே சென்றுள்ளது, கட்சிகள் தேர்தல் ஆணையத்துக்கு சமர்பித்துள்ள கணக்கு மூலம் தெரிய வந்துள்ளது. இதில் சில கார்ப்பரேட் கம்பெனிகளின் நன்கொடை கள், வருமான வரித்துறை போன்ற ஒன்றிய அரசின் அமைப்புகளால் சோதனை என்ற பெயரில் மிரட்டப்பட்டு பெறப்பட்டுள்ளன என்ற குற்றச்சாட்டு ஏற்கனவே இருப்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், தேர்தல் பத்திரம் மூலம் யார், யாருக்கு யார், யார் நன்கொடை அளித்துள்ளார்கள் என்ற விவரங்கள் வெளியானால், இந்த குற்றச்சாட்டை உறுதிப்படுத்தும். மேலும், இது ஊழலுக்கு எதிரான கட்சி என்று தங்களை சொல்லிக் கொள்ளும் பாஜக வின் பிம்பத்துக்கு பெரிய பின்னடவை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை. எனவேதான் தேர்தல் பத்திரம் மூலமான நன்கொடை விவரங்கள் வெளியாகக் கூடாது என்பதில் மோடி உறுதியுடன் இருக்கிறார்.

வெல்லப்போவது யார்? உச்ச நீதிமன்றமா மோடி? - இந்த கேள்விகளுக்கான விடைகள் விரைவில் தெரியும்.

# கவிதைச் சகாப்தம் ஓய்ந்ததோ! கவிநாயகர் வி. கந்தவனம் எமைப் பிரிந்தார்





கவிநாயகர் என அனைவராலும் அன்பாக அழைக்கப்பட்டு வந்து இலக்கியர் ஒருவரை தமிழ்கூறும் நல்லுலகு இன்று இழந்துவிட்டது. 11.03.2024 அன்று அவரது இல்லத்தில் அன்னார் இயற்கை எய்தினார்.

இலங்கையின் வடபுலத்திலமைந்த தென்மராட்சி எனப் பெயர்பெறும் சாவகச்சேரிப் பிரதேசத்தில் நுணாவில் கிராமத்தில் பிறந்தவர் விநாயகர் கந்தவனம் அவர்கள். நுணாவில் தமிழ்க்கலவன் பாடசாலையில் தனது ஆரம்பக்கல்வியைத் தொடங்கிய அவர் மேலும் தொடர்ந்து கற்பதற்காக அக்காலத்தில் சாவகச்சேரிப் பிரதேசத்தில் புகழ்பெற்றிருந்த சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் உயர்வகுப்பில் படித்துச் சித்தியெய்தினார். தொடர்ந்து கல்வியைக் கற்பதற்கு அவரது அண்ணனின் ஆதரவின் காரணமாக தமிழகம் சென்று, சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரியிலும், கோவைக் கலைக்கல்லூரியிலும் பயின்று கலைமானிப் பட்டம் பெற்றவர். ஆங்கிலம், புவியியல், பொருளியல் ஆகிய பாடங்களைக் கற்றுத் தனது பட்டப்படிப்பினை முடித்துக்கொண்டு நாடு திரும்பி ஆசிரியத் தொழிலில் கால்பதித்து திறப்பட இயங்கிவந்தார்.

குடும்பத்தினரின் விருப்பின்பேரில் வலிகாமம் பகுதியில் உள்ள குரும்பசிட்டியில் தவமணிதேவி என்னும் நங்கையைத் திருமணம் செய்து தனது வாழ்க்கைத் துணையாக்கி இல்லறமாம் நல்லறத்தில் அவருக்கு வருணன், வாணி எனவிரு செல்வக்குழந்தைகள் கிடைத்தனர்.

தொடர்ந்து கல்வித்துறை, நாடகத்துறை ஆகியவற்றில் பட்டப்படிப்பில் டிப்ளோமாவும் பெற்றார். கல்வித்துறையில் நிறைந்த தகைமைகள் பெற்ற கந்தவனம் அவர்கள் ஆளுமை நிறைந்த ஆசிரியராக, அதிபராகக் கல்விப் பணியாற்றி, கல்வித் திணைக்களப் பாடநூற் சபையிலும் பல்வேறு பணிகள் ஆற்றிய பின்னர், தென்னாபிரிக்காவிலும் ஆசிரியப் பணி புரிந்து, சிறந்த ஆசிரியர் எனப் புகழ் பெற்றவர். கவிஞரைப் பற்றி பேரறிஞர் ஆழ்கடலான் பரமநாதன் கூறும்போது, "ஒரு நதி மலையிலே உற்பத்தியாகிப் பல கிளைகளையும் இணைத்து ஏரி, குளம், குட்டை, துரவு, துறை, ஓடைகளைத் தொட்டுப் பரந்து பாய்வது போலக் கவிஞர் கந்தவனம் என்னும் சரயுநதி தொட்டுத் தடவாத துறைகளில்லை" எனப் பாராட்டியது இன்றுபோல் என் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருந்தது.



இருபதாம் நூற்றாண்டின் நடுப் பகுதியின் பின்னர் தமிழ் இலக்கியத்தில் புதுமை காண்பதிலும், இலக்கிய விமர்சனத்துறையில் யதார்த்தத்தை நிலைப்படுத்துவதிலும் ஈழத்தவர் முன்னின்றுழைத்தனர். கவிதைத் துறையில் சாதனை படைத்தவர்கள் மகாகவி, கவிஞர் கந்தவனம், முருகையன், பண்டிதர் க.வீரகத்தி, காசி ஆனந்தன், நீலாவணன், திமிலைத் துமிலன் என்போரைக் குறிப்பிடலாம். யாழ்ப்பாணத்தில் 'யாழ் இலக்கிய வட்டம்' என்ற அமைப்பை உருவாக்கி கவி அரங்குகள், கருத்தரங்குகள், தமிழ் மாநாடுகள், பட்டிமன்றங்கள் முதலான கலை, இலக்கிய நிகழ்வுகளை நடத்திய வர்களில் இரசிகமணி கனகசெந்திநாதன், சொக்கன், ஆகியோருடன் கவிஞர் கந்தவனம் அவர்களின் பங்களிப்பு முதன்மையானது. அவ்வமைப்பின் முதல் எட்டாண்டுகள் தலைவராகவும் செயற்பட்டு, யாழ்ப்பாணத்தில் புதுமை இலக்கியப் பாரம்பரியம் வளர்ச்சிபெற முன்னின்று உழைத்தவர் கவிஞர் கந்தவனம். இத்தகைய இலக்கியத் துடிப்பின் தொடர்ச்சியாக கனடா எழுத்தாளர் இணையத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவராகவும் அதன் தலைவர், காப்பாளர் என்னும் பதவிகளையும் வகித்துள்ளதோடு, தான் கல்வியறிவூட்டி வளர்த்தெடுத்த கவிஞர்களை வைத்து கனடாக் கவிஞர் கழகத்தையும் உருவாக்கி அதன் தாபகராகவும் காப்பாளராகவும் பணிகண்டவர்.

ஈழகேசரிப் பத்திரிகை ஆசிரியர் இராஜ அரியரெத்தினம் அவர்கள், கவிஞரை அறிமுகப்படுத்தும்போது, "பள்ளிக் கூடத்தில் துள்ளி விளையாடும்போதே எழுத்துலகில் அடி எடுத்து வைத்த விநாயகர் கந்தவனம் சாவகச்சேரியைச் சேர்ந்த நுணாவில் மேற்கில் 1933,ல் பிறந்தவர் என்றும், இவரது கவிதைகள் 1952லிருந்து ஈழகேசரியில் வெளிவரத்தொடங்கின எனவும், எழுத்தாளர்களை ஒன்றிணைக்கும் மனோபக்குவம் இளமை முதல் முதுமைவரை அவரிடம் வளர்ந்தோங்கியதைக் குறிப்பிட்டே ஆகவேண்டும்." எனக் குறிப்பிடுவதன் மூலம் கவிஞர் மேலும் மெருகேற்றப்பட்டார்.



கவிஞன் என்பவன் நாட்டுக்கு நல்லன சொல்ல வேண்டும், செய்ய வேண்டும். தமிழ் எழுத்தாளர்கள் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என்ற உணர்வும், செயலும் கொண்டவராகக் கவிஞர் தம் இளமைக்காலம் முதலாகச் செயற்பட்டவர் என்பதற்கு அவரது 'இலக்கிய உலகம்' (1964) என்ற நூல் சான்றாகும். அதைவிட அவர் கிட்டத்தட்ட 80 நூல்களை ஆக்கித் தந்த பெரும் எழுத்தாளராகவும் அறிப்படுகின்றார்.

கவிநாயகர் கந்தவனம் அவர்கள் மொழிப் பற்றும் இலக்கியப் பற்றும் கொண்டவர். அவரது மேடைப் பேச்சை நான் மிகவும் விருப்புடன் சுவைப்பேன். அவர் மேடைப் பேச்சிலும், கவிதையிலும், எழுத்திலும் தனது கருத்தைத் தயக்கமின்றித் துணிந்து கூறும் பண்பினர். கந்தவனம் அவர்கள் புதிய எழுத்தாளர்களைக் கைகொடுத்துத் தூக்கிவிடுபவர். எனினும் அவரது நக்கீரப் பார்வை வரவேற்கத்தக்கது. எழுத்தாளன் சமூக உணர்வுடையவனாக இருத்தல் வேண்டும் என்பதில் கவிஞர் கந்தவனம் மிகுந்த நம்பிக்கையுடையவர். இன்றைய சூழலில் தாயகத்தில் மட்டுமன்றி, தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலுள்ள எழுத்தாளர் தமது இனத்திற்குப் பெருந் தொண்டு செய்யக் கடமைப்பட்டுள்ளனர். புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் தமிழ்ப் பண்பாடும், தமிழ்மொழி வழக்காறும் சரிந்துகொண்டே போகின்றன. இதனைப் பொதுமக்கள் உணரத் தவறுகின்றனர். இத்தகைய சமூகக் கண்ணோட்டம் கவிஞர் கந்தவனம் அவர்களிடம் ஆழமாகப் பதிந்திருப்பதை 'எழுத்தாளன்' என்ற நூலிற் (பக். 53) பதிவு செய்திருக்கிறார்.

சுமார் 75 ஆண்டுகளுக்குமேலாக இலக்கிய உலகில் உலாவந்த அவர், சிறுகதை, கவிதை, கட்டுரை, நாடகம், விமர்சனம், சமயச் சொற்பொழிவு, வானொலிப் பேச்சு எனப் பல்வேறு துறைகளில் தனது முத்திரைகளைப் பதித்துள்ளார். அவர் கனடியத் தமிழ் வாசகர்களுக்காக ஊடகங்களின் மூலமாக தொடர்ச்சியாக எழுதியும் உரையாற்றியும் வந்துள்ளார்.

நாவலர், சுவாமி விபுலாநந்தர், ஆத்மஜோதி முத்தையா போன்ற பெருந்தகையாளர் காட்டிய வழியில் ரொறொன்ரோவில் சைவமுந் தமிழும் வளர்ப்பதில் முனைப்பாகச் செயற்படும் கவிஞர் அவர்கள், கனடா இந்து சமயப் பேரவையின் காப்பாளராகவும், 'ஆத்மஜோதி' மாதச் சஞ்சிகையைப் பதிப்பித்து வெளியிடுபவராகவும் செயற்பட்டது போற்றத்தக்கதே. இவரது சமயச் சொற்பொழிவுகள் கேட்போருக்கு மன அமைதியைக் கொடுக்கும். இவர் வானொலியில் நிகழ்த்தும் சமயச் சொற்பொழிவுகள் அருள்திரு கிருபானந்த வாரியார் அவர்களை நினைவூட்டும். கனடா இந்து சமயப் பேரவையின் அடியார் குழாத்துடன் சேர்ந்து திருமுறை முற்றோதல், கந்தபுராணப் படிப்பு என அவர்கள் மேற்கொண்டு வந்த சைவப் பணியினால் சைவமும் தமிழும் ரொறொன்ரோவில் வளம்பெற்றன. கனடாவில் சைவத் தமிழரது பண்பாடு கோயில்களின் ஊடாகவும், விழாக்கள், விரதங்கள், சமய அனுட்டானங்கள், சமய நம்பிக்கை என்பனவற்றின் வழியாகவும் எவ்வாறு பேணப்படுகிறது என்பதை விரிவாக ஆராய்ந்து எழுதியுள்ள 'கனடாவில் சைவ சமயம்' (2000) என்னும் நூல் மிக்க பயனுடையது. கவிஞரின் 'விநாயகப்பா' (1993), "பாவாரம்' (2014) என்னும் இரு நூல்களும் ஈழத்திலும், தமிழகத்திலும் உள்ள சைவத்திருத்தலங்கள் மீது பாடப்பட்ட பக்திப் பாசுரங்களாகும். சைவநாயன்மார் பாடியருளிய திருமுறைப் பதிகங்கள் போன்ற கவிஞருடைய பாவாரப் பதிகங்கள் அவரை நாயன்மார் வழியில் அடையாளம் காட்டுகின்றன. யாழ்ப்பாணத்துச் சித்தர் யோகர்சுவாமிகளின் அடியார்கள் வரிசையில் கவிநாயகம் அவர்களும் இடம்பெற்று, கனடா சிவதொண்டன் நிலையத்தின் பணிகளிலும் தன்னை இணைத்துக்கொண்டவர்.

'கவிநாயகர் - வாழ்வும் வரலாறும்' (2013) என்ற நூலை வித்துவான் செபரத்தினத்தோடு இணைந்து செப்பனிடும் பணி கிடைத்தமை எனக்குப் பெருமையைத் தந்தது. வாழும்போதே ஒருவரின் வரலாற்றினை, அனுபவங்களை, சமகாலத்

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)




சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416.754.7338 / 416.724.7480
3011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# நானிலம் போற்றும் நட்பு - 40




“எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ
மன்றில் பழிப்பார் தொடர்பு.” (அதிகாரம் தீ நட்பு, குறள் 820) என்ற குறளிற்கு “தனியே வீட்டில் உள்ளபோது பொருந்தியிருந்து, பலர் கூடிய மன்றத்தில் பழித்து பேசுவோரின் நட்பை எவ்வளவு சிறிய அளவிலும் அணுகாமல் விடவேண்டும்.” என்று உரையாசிரியர் மு.வரதராசனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

“வீட்டில் உறவு காட்டி பொது இடத்தில் பழிப்பவர், சிறிதும் நம்மை நெருங்காதபடிக் காத்துக் கொள்ள வேண்டும்.” என்று உரையாசிரியர் அருள்திரு திருக்குறள் மாமுனிவர் முனைவர் கு. மோகனராசு அவர்கள் உரை தந்துள்ளார்.

“வீட்டிலே புகழ்ந்து, வெளியிலே இகழ்பவர் நட்பை அடியோடு கைவிடவேண்டும்” என்று உரையாசிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

“தனியாகச் சிந்திக்கும் போத இனிமையாகப் பழகிவிட்டுப் பொது மன்றத்தில் பழித்துப் பேசுபவரின் நட்பு தம்மை அணுகாமல் விலக்கிக் கொள்ளப்படவேண்டும்.” என்று உரையாசிரியர் கலைஞர் அவர்கள் உரை தந்துள்ளார்.

வீட்டிலும், வெளியிலும் மாறுபாடாக நட்பை காட்டுபவர்களிடம் உள்ள நட்பினால் பயன் இல்லை என்ற அறிவுரையை இந்தக் குறள் கூறுகிறது.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் நாற்பத்தேழாவது பாடலைக் கவனிப்போம்.

இப்பாடல் நெடு வெண்ணிலவினார் என்பவரால் பாடப்பட்டது. இந்தப் பெயர் இப்புலவரின் இயற்பெயர் இல்லை. காரணப் பெயர். நெடு வெண்ணிலவு என்ற தொடர் இப்பாடலில் அமைந்திருப்பதே இவருக்கும் பெயராக வந்தது. இரவுக் குறியிலே ஒழுகும் தலைவனுக்குத் தோழி மணம் புரிந்துகொள்ளும்படி சாடையாகக் கூறியது. தோழி கூற்றாக உள்ளது. இது குறிஞ்சித் திணை சார்ந்தது.

“கருங்கால் வேங்கை வீஉகு துறுகல்
இரும்புலிக் குருளையின் தோன்றும்: காட்டிடை
எல்லி வருநர் களவிற்கு
நல்லை அல்லை நெடுவெண் நிலவே!”

ஒரு தலைவனும், ஒரு தலைவியும் அடிக்கடி இரவிலே சந்தித்துப் பழகுகின்றனர். இதற்குத் தோழியும் உடன்பாடுதான். இந்த இரவுச் சந்திப்பை ஒரு முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்பது தோழியின் ஆவல். இது முடிவு பெறவேண்டுமானால் அந்தக் காதலர்கள் வெளிப்படையாக மணம் புரிந்துகொண்டு வாழவேண்டும் இல்லாவிட்டால் அவர்கள் சந்திப்பை யாராலும் நிறுத்த முடியாது. இதுவும் தோழிக்குத் தெரியும்.

தலைவனைப் பார்த்து “நீ இவ்வாறு இரவிலே அடிக்கடி வந்து போவது தவறு தலைவியை விரைவிலே மணம் புரிந்து கொள்” என்று வற்புறுத்திக் கூறவும் தோழிக்கு மனம் இல்லை. ஆதலால் அவள் தன் கருத்தைக் குறிப்பாக- சாடையாகக் கூறினாள்.

ஒரு நாள் இரவு வழக்கம்போல் தலைவியைக் காண வந்திருக்கின்றான் தலைவன். அப்பொழுது நல்ல நிலவொளி பட்டப்பகல்போல் வீசுகின்றது. தோழி தலைவனிடம் சென்றாள். அவனைக் கீழும் மேலும் பார்த்தாள். வானத்தையும் அண்ணாந்து பார்த்தாள். நட்சத்திரங்களின் நடுவிலே நன்றாகத் தண்ணிலவு வீசித் தவழ்ந்து கொண்டிருக்கும் சந்திரனைப் பார்த்தாள். அதனிடம் தன் உள்ளத்தில் வெளியே புறப்படுவதற்குத் துடித்துக் கொண்டிருந்த எண்ணத்தை வீசியெறிந்தாள்.

இந்தப் பாடலுக்கான பொருளினைக் கவனிப்போம்.




“நீண்ட நேரம் காணப்படும் வெண்ணிலாவே. வலிமையான அடிப் பாகத்தையுடைய வேங்கை மரத்தின், மலர்கள் சிந்திக் கிடக்கின்ற உருண்டை வடிவான கற்கள், பெரிய புலிக்குட்டியைப் போல, காணப்படும். காட்டின் வழியாக, இரவிலே வருகின்றவராகிய, தலைவருடைய களவொழுக்கத்திற்கு. நீ நன்மை செய்யவில்லை. கேடுதான் செய்கின்றாய்.”

இன்னும் களவு மணத்தில் நீடிப்பது நன்றன்று தலைவியை மணந்து கொண்டு கற்பொழுக்கத்தை மேற்கொள்ள வேண்டும் என்கிறாள் தோழி.

குண்டுக் கற்களின் மேல் வேங்கை மலர் உதிர்ந்து கிடக்கும் தோற்றம் புலிக் குட்டிகள் போல் இருக்கின்றன. குண்டுக் கற்களுக்குப் புலிக் குட்டிகள் உவமை. இந்தப் பாடல் மூலம் தோழியின் அக்கறை நன்கு புலனாகின்றது.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் நாற்பத்தெட்டாவது பாடலைக் கவனிப்போம்.

இப்பாடல் பூங்கணுத்திரையார் என்னும் புலவர் பாடிய பாட்டு. தலைவியின் துன்பத்தைக் கண்ட தோழி ‘தலைவன் இவனுக்கு இசைவான ‘மணந்து கொள்வேன்’ என்னும் உறுதி மொழியை உரைக்க மாட்டானா?’ என்று கூறி வருந்தினாள். தோழி கூற்றாக உள்ளது. இந்தப் பாடல் பாலைத்திணை சார்ந்தது.

தலைவி, தலைவனைக் காணாதபோது தனிமையால் தவித்துக் கொண்டிருப்பாள். அவள் தவிப்பை தன் வாயினால் சொல்லாவிட்டாலும் அவள் தோற்றம் தெரிவித்து விடும். மாந்தளிர் மேனியிலே மாசு படர்ந்து விடும். பசலை நிறமுடையவளாய்க் காணப்படுவாள். இளமை தொட்டு இணைந்து மகிழ்ந்து விளையாடிய தோழியர் கூட்டத்துடன் சேர்ந்து விளையாட மாட்டாள். சிரிக்கவும் மாட்டாள். ஏக்கம் பிடித்த உள்ளத்துடன் சிறகற்ற பறவைபோல் உட்கார்ந்து கொண்டிருப்பாள்.

இது தலைவியின் இயல்பாக இருந்தது. இதைக் கண்ட அவளுடைய ஆருயிர்த் தோழி அகமுருகினாள். அவன் இவளை ஊரார் அறிய மணம் புரிந்து கொண்டால்தான் இருவரும் பகலிலும் இரவிலும் ஒன்றாக உறைந்து உவப்படைய முடியும். ஆதலால் இவளுக்கு விருப்பமான ஒரு சொல்லை அத்தலைவன் சொல்லமாட்டானா? “நான் மணந்து கொள்ளுகின்றேன்” என்ற சொல்லை அவன் எப்பொழுது சொல்லுவானோ? இந்த உறுதிமொழியை- தலைவிக்கு விருப்பமான மொழியை- அவள் பசலை நோயைப் போக்கும் மொழியை, தலைவனாற் சொல்ல முடியாதா? என்று வருந்தினாள் தோழி இந்த நிகழ்ச்சியை எடுத்துரைப்பதே இப்பாடல்.




‘தாதில் செய்த தண்பனிப் பாவை
காலை வருந்தும் கையாறு ஓம்பு’ என
ஓரை ஆயம் கூறக் கேட்டும்
இன்ன பண்பின் இனைபெரிது உழக்கும்
நன்னுதல் பசலை நீங்க, அன்ன
நசையாகு பண்பின் ஒருசொல்
இசையாது கொல்லோ காதலர் தமக்கே’.

இந்தப் பாடலுக்கான பொருளினைக் கவனிப்போம்.

